30th October 1962]

ஓட்டல் தொழிலாளர் பயிற்சிப் பள்ளிக்கூடம்

950-எ கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓட்டல் தொழிலாளருக்குப் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எங்கே ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு ஆர். வெங்கட்ராமன் : (அ) ஆம், ஐயா.

(இ) சென்னை நகரத்தில் அமைக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

உல்லாசப் பிரயாணம் (விளம்பரம்)

950-பி. கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) இன்ப உலா வரும் வெளிநாட்டு மக்கள், நம் நாட்டிற்குப் பெருவாரியாக வருதல் வேண்டும் என்ற குறிக்கோளோடு, அவர்களின் உள்ளங்களைக் கவரும் வகையில், நம் நாட்டில் ஆங்காங்குள்ள காட்சி இன்பம் மிக்க இயற்கை நலம் வாய்ந்த இடங்களையும், வரலாற்றுச் சிறப்பமைந்த இடங்களையும் திரைப்படங்களாக்கி வெளிநாடுகளில் காட்டும் திட்டம் ஏதேனும் உளதா ?

(இ) அப்படியானால், அத் திட்டத்தில் தமிழகத்திற்கு எந்த அளவு இடம் ஒதுக்கப்பெற்றுளது ?

கனம் திரு. ஜி. பூவராகன் : (அ) இம்மாதிரி ஒரு திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்க பிலிம்ஸ் டிவிஷனால் ஏற்கனவே அநேக திரைப் படங்கள் எடுக்கப்பட்டு இந்நாட்டிலும், இந்திய உல்லாசப் பயணத் தகவல் நிலையங்கள், தூதராலயங்கள் மூலமாக வெளிநாடுகளிலும் திரையிடப்பட்டன.

(இ) இப்படங்களில் தமிழ்நாட்டின் முக்கியமான உல்லாசப் பயண இடங்களாகிய சென்னை, காஞ்சி, மாமல்லபுரம், மதுரை, தஞ்சாவூர், உதகமண்டலம், கொடைக்கானல் முதலியன இடம் பெற்றிருக்கின்றன.

Houses for Fishermen

* 950-C. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of houses so far constructed at Tondiarpet, Madras near Seniamman Koil Street Grounds for fishermen;

(*b*) the number of houses so far allotted;

(*c*) the reasons for the delay in allotting the houses; and

(*d*) on what basis the houses will be allotted?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Out of 434 tenements sanctioned for construction, 76 have been completed, 304 are nearing completion, and the remaining 54 are in different stages of construction.

(*b*) Tenements were allotted to ten families in March 1961, but they vacated the tenements on the plea that all the amenities have not been provided.